# தமிழ்நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24312841.*

**வழக்கு எண்.14843/விசாரணை/09**

**விசாரணை நாள் 24.09..2009**

| | |
|---|---|
| முன்னிலை | முனைவர் (திரு) ஆர். பெருமாள்சாமி, எம்.ஏ.,எம்.பில்.,பி.எச்.டி.,<br>மாநில தகவல் ஆணையர் |
| மனுதாரர் | திரு. மு. பெரியசாமி<br>த/பெ. முத்துகவுண்டர்<br>குறவன்காடு, புதுப்பேட்டை அஞ்சல்<br>ஆத்தூர் வட்டம், சேலம் மாவட்டம். |
| பொது அதிகார அமைப்பு | பொதுத் தகவல் அலுவலர்<br>வட்டாட்சியர் அலுவலகம்<br>ஆத்தூர் தாலுகா, ஆத்தூர்<br>சேலம் மாவட்டம். |

---

இவ்வாணையத்தில் இன்று (24.09.2009) நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு. மு. பெரியசாமி அவர்களும், பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர் திரு. என். சக்திவேல், தலைமையிடத்து துணை வட்டாட்சியர் (பொ), ஆத்தூர் வட்டாட்சியர் அலுவலகம், சேலம் அவர்களும் வந்திருந்தனர்.

இவ்வழக்கு (வழக்கு எண்.27046/08) ஏற்கனவே 27.05.09 அன்று விசாரணை செய்யப்பட்டது.

இன்றைய விசாரணையின் போது பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய கோப்பு எண்.AM/5-1400-B.1 நாள் 31.8.1990ல் பிறப்பிக்கப்பட்ட அடமான உத்தரவின் சான்று நகலையும் ஆத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தின் AM/5-1400-B1 நாள் 31.8.1990 எண் கொண்ட அடமானக் கோப்பில் உள்ள அனைத்து ஆவணங்களுக்கும் சான்றிட்ட நகலையும் வழங்கவும் மற்றும் கோப்புகளை பார்வையிடவும் அனுமதிக்குமாறு உத்தரவிட்டிருந்தது.

ஆனால், மேற்கண்ட கோப்புகளை ஆத்தூர் வட்ட அலுவலக பதிவறையில் தேடிப்பார்த்ததில் கிடைக்கவில்லை என்பதால் அதற்குண்டான நகலை மனுதாரருக்கு வழங்கவும், பார்வையிடவும் ஏற்பாடு செய்ய இயலவில்லை என்று பொதுத் தகவல் அலுவலர் இவ்வாணையத்தின் முன் தெரிவித்து அதை உறுதி செய்து பிரமாண வாக்குமூலம் (Affidavit) ஒன்றையும் சமர்ப்பித்ததன்அடிப்படையில் இவ்வழக்கில் மேலும் விசாரிப்பதற்கு ஏதுமில்லை எனக் கருதி இவ்வழக்கு இத்துடன் முற்றுப் பெறுகிறது.

தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 சட்டப்பிரிவு 7(1)ன் கீழ் 30 நாட்களுக்குள் மனுதாரருக்கு தகவல் வழங்காததற்காக அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் மீது சட்டப்பிரிவு 20(1)ன் கீழ் ஏன் அதிகபட்சமாக ரூ.25,000/– அபராதம் விதிக்கக்கூடாது என்பதற்கும் சட்டப்பிரிவு 20(2)ன் கீழ் ஏன் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்யக்கூடாது என்பதற்கும் உள்ள விளக்கத்தினை மாவட்ட ஆட்சியர், சேலம் அவர்களின் மூலமாக இவ்வாணை கிடைத்த ஒரு மாதத்திற்குள் அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிடப்படுகிறது.

தமிழ்நாடு தகவல் ஆணையம்.

ஒப்புதல் பெறப்பட்ட நாள் 06.10.2009
ஆணையத்தின் ஆணைப்படி.

உதவி பதிவாளர்.

<u>வழக்கு எண்.14843/09</u>
மாவட்ட ஆட்சித்தலைவர்
சேலம் மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்
வட்டாட்சியர் அலுவலகம்
ஆத்தூர், சேலம் மாவட்டம்.

திரு. லியாகத் அலி
வட்ட வழங்கல் அலுவலர் (முன்னாள் தலைமையிடத்து துணை வட்டாட்சியர்)
மாவட்ட நூலகக் கட்டிடம்,
மரவனேரி, சேலம் மாவட்டம்.

திரு. எம். பெரியசாமி
த/பெ. முத்து கவுண்டர்
குறவன்காடு, புதுப்பேட்டை அஞ்சல்
ஆத்தூர் வட்டம், சேலம் மாவட்டம்.